

# சட்டத் துறை

## மானியக் கோரிக்கை எண். 33

அறிவிப்புகள்

2020–2021

# சட்டத் துறை

மானியக் கோரிக்கை எண் – 33

## அறிவிப்புகள்
## 2020–2021

**சி.வி. சண்முகம்**
சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்
சிறைச்சாலைகள் துறை அமைச்சர்

# சட்டத் துறை

## அறிவிப்புகள்
## 2020–2021

### 1. திருச்சிராப்பள்ளி மற்றும் செங்கல்பட்டு அரசு சட்டக்கல்லூரிகளில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல்

திருச்சிராப்பள்ளி மற்றும் செங்கல்பட்டு அரசு சட்டக்கல்லூரிகளில் மாணவர்களுக்கு போதுமான உட்கட்டமைப்பு வசதிகளுடன் 11 கோடியே 71 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறைகள் கட்டப்படும்.

## 2. அரசு சட்டக்கல்லூரிகளில் முதுகலை சட்டப்படிப்பு (எல்.எல்.எம்.,) துவங்குதல்

வேலூர் மற்றும் இராமநாதபுரம் அரசு சட்டக்கல்லூரிகளில் வரும் கல்வியாண்டு முதல் புதிதாக எல்.எல்.எம்., பட்டப்படிப்பும், மதுரை, கோயமுத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் விழுப்புரம் அரசு சட்டக்கல்லூரிகளில் கூடுதலாக எல்.எல்.எம் பட்டப்படிப்பு பிரிவுகளும் தொடங்கப்படும். இச்செலவுகளுக்காக ரூ.50 இலட்சம் வழங்கப்படும்.

### 3. அரசு சட்டக்கல்லூரி மாணவர்களிடையே மாதிரி நீதிமன்றப் போட்டிகளை நடத்துதல்.

தமிழ்நாட்டில் உள்ள 14 அரசு சட்டக்கல்லூரிகளிலும் மாதிரி நீதிமன்றப் போட்டிகள் நடத்தப்பட்டு பன்னாட்டு மாதிரி நீதிமன்ற போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவ மாணவியர் தேர்ந்தெடுக்கப்படுவர். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிநாடுகளுக்குச் செல்லும் மாணவ மாணவியரின் அனைத்துச் செலவுகளையும் அரசே ஏற்கும். இச்செலவுகளுக்காக ஆண்டுதோறும் ரூ.70 இலட்சம் வழங்கப்படும்.

## 4. திருச்சிராப்பள்ளியிலுள்ள தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தில், சட்ட வரலாற்று மாநாடு நடத்துதல்.

2021–ஆம் ஆண்டு, திருச்சிராப்பள்ளியிலுள்ள தமிழ்நாடு தேசிய சட்டப்பல்கலைக்கழகத்தில் ரூ.10.65 இலட்சம் செலவில் சட்ட வரலாற்று மாநாடு (Legal History Congress) நடத்தப்படும்.

## 5. திருச்சிராப்பள்ளி தமிழ்நாடு தேசிய சட்டப்பல்கலைக்கழகத்திலுள்ள, சட்ட வரலாற்று அருங்காட்சியத்தினை விரிவாக்கம் செய்தல்.

ஆவணங்களை எண்மப்படுத்தவும் (Digitalization) , காப்பீடு (Insurance) செய்யவும், இவற்றினை எண்ம வரலாற்று ஆவணங்களாக (Digital Archieves) மாற்றம் செய்து அவற்றினைப் பாதுகாத்திடும் பொருட்டும், ரூ.25 இலட்சம் செலவில் திருச்சிராப்பள்ளியிலுள்ள தமிழ்நாடு தேசிய சட்டப்பல்கலைக்கழக சட்ட வரலாற்று அருங்காட்சியகம் விரிவாக்கம் செய்யப்படும்.

## 6. திருச்சிராப்பள்ளியிலுள்ள தமிழ்நாடு தேசிய சட்டப்பல்கலைக்கழகத்தில் புதிய சட்ட மையங்கள் நிறுவுதல்.

திருச்சிராப்பள்ளியிலுள்ள தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தில், மகளிர் நலச் சட்ட மையம் மற்றும் தென்னிந்திய சட்ட வரலாற்று மையம் ஆகியவை ரூ.20 இலட்சம் செலவில் நிறுவப்படும்.

**சி.வி. சண்முகம்**
சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்
சிறைச்சாலைகள் துறை அமைச்சர்